Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 5th & 6th of Every month

| Regd. No. TN / CC (S) DN / 119 / 09-11 | Lincensed to Post without prepayment WPP No. TN / CC (S) DN / 51 / 09-11 |
|---|---|

வேணு : 16 ஜூன் 2011 கானம் : 11



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No. 2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083. and Printed by Mrs. Sri.Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar.

**Related Websites : www.namadwaar.org**

**Email:contact@namadwaar.org**

ஸ்ரீ ஹரி :

NO FAME NO NAME NO SELF INTEREST ONLY GOD

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

Rs.10/-

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

வேணு : 16 ஜூன் 2011 கானம் : 11

Delivered by India Post www.indiapost.gov.in



# மதுரபுரி ஆஸ்ரமத்தில் உதயாஸ்தமன ஸ்ரீமத்பாகவத சப்தாஹம் - மே 10- 16, 2011



மேலே:
ஏப்ரல் 22- மே2,
மதுரபுரி ஆஸ்ரமம் -
வசந்தோத்ஸவத்தில்
ஸ்ரீப்ரேமிகவரதன்



வலது:
ஏப்ரல் 30
பெங்களூர் ஸ்ரீசுந்தர
ஆஞ்சநேயர்
கோவில்
பிரதிஷ்டாதினம்



ஏப்ரல் 19- 24 குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி சார்பாக சிங்கப்பூர் ஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் சத்சங்கம் - பூர்ணிமாஜி





மே 9 -16 - மேலமாம்பலம் அயோத்யா மண்டபத்தில் ஜனாபாய் டிரஸ்ட் சார்பாக - ஸ்ரீமத்பாகவதம் உபன்யாசம் - ஸ்ரீ உ.வே.பாலாஜி



குளோபல்
ஆர்கனைசேஷன் ஃபார்
டிவினிடி ஆண்டு விழா
ஏப்ரல் 30, மே 1, 2 –
தூத்துக்குடி



தூத்துக்குடி கேந்திராவின்
"சாந்த சக்குபாய்"



மஹாரண்யம் சுற்றி உள்ள
கிராம அன்பர்களின்
"பத்ராசலம் ராமதாசர்"



அம்பாசமுத்திர
சத்சங்கத்தினரின்
"பக்த மார்க்கண்டேயன்"





சங்கர ஜெயந்தி விழா – மயிலை சமஸ்கிருத கல்லூரி – மே 6, 2011



கோவில்பட்டியில் புதிய நாமத்வார் திறப்பு – நரசிம்ம ஜயந்தி – மே 16, 2011

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு:16 ஜூன் 2011 கானம்:11

| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 183 | 04 | கடவுள் அருளும் நேரம் | 12 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 06 | கடவுளுக்கு ஒரு கடிதம் | 22 |
| பாகவத பழம் -15 | 08 | மாலே மணிவண்ணா-96 | 31 |

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

உலக சுகங்களில் பற்றுள்ளவன் பூஜை, ஜபம், ஹோமம், யோகம், தானம், தர்மம், திருப்பணி, அன்னதானம் போன்ற எதை செய்தாலும் அதனால் கிடைக்கும் பலனை உத்தேசித்துத்தான் செய்வான். பலன் கிடைக்கவில்லை என்றால் வருத்தப்படுவான். அதுபோல் ஞானத்தை அடைய முயலும் ஒவ்வொரு சாதகனும் நாம் செய்யும் பூஜை, ஜபம், யோகம், தானம், தர்மம், திருப்பணி, அன்னதானம் போன்ற எதை செய்தாலும், மனம் அடங்கி ஒருமுகப்படுகின்றதா என்பதையே குறிக்கோளாக கொள்ள வேண்டும். அப்படி இல்லை என்றால், நாம் மேற்படி விஷயங்களை சரியாக செய்யவில்லை என்பதை புரிந்து கொண்டு, இனிமேலாவது சரியாக செய்ய முயல வேண்டும்.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

# ஸ்ரீஸ்வாமிஜியின் மீது கீர்த்தனம்

## ஒக்கட்டே ஒக்கட்டு

மீரு எவரு எவரு செப்பு செப்பு முரளீதரா
மீரு அவ்தாரமு எநதுக்கு செப்பு செப்பு முரளீதரா
பிரம்மம் ஒக்கட்டே பிரம்மம் ஒக்கட்டே என்ட மீரு செப்புத்தாரே முரளீதரா
அட்ல அண்டே பரபிரம்மம் ஒக்கட்டே மீருதானே செப்பு முரளீதரா

அக்கட உன்ன பாண்டுரங்கடு இட்ல உன்னாரு எடை
மீரு செப்பினாரே முரளீதரா
இக்கட உன்ன பாண்டுரங்கடு மீரே காதா முரளீதரா
விட்டல விட்டல என்று மீரு செப்புதாரே அப்புடு அப்புடு அண்ட விட்டலனு
மீரே காதா முரளீதரா
போதேந்திரகாரு அய்யாவாள்காரு சத்குருகாரு அண்ட அண்ட
மீரே காதா முரளீதரா

அப்புடு ஸ்ரீநிவாஸடு மீருன சூசினாரு காதா முரளீதரா
இப்புடோ நீலஜோதி பாண்டுரங்கடு மீருன சூசினாரு காதா முரளீதரா
அப்புடு மீராஜி கிருஷ்ணடு ஒக்கட்டே காதா முரளீதரா
இப்புடு மீரு ப்ரேமிகவரதடு ஒக்கட்டே காதா முரளீதரா

எப்புடு எப்புடு மீரு பாகவதாளு எண்ட செப்புததாரோ முரளீதரா
அப்புடு அப்புடு மீரு பாகவதாளு அண்டே உன்னாரு காதா முரளீதரா
அப்புடு அப்புடு எக்கட பருகித தாரு முரளீதரா
அடல மீரு சோலாரே அப்புடு அப்புடு பாகவதாளு
ஒக்கட்டனே காதா முரளீதரா

ஜயதேவரு அஷ்டபதி ராசி பஜனை சேசினாரு முரளீதரா
மீரோ கீர்த்தனம் ராசி பஜனை சேஸிதாரு முரளீதரா
மீரு நாம சங்கீர்த்தன பணி சேசவே அவதாரமு காதா முரளீதரா
மன குரு யோகிஜி காரு சேசின பணி அண்ட திகே திகே
சேசபதானே முரளீதரா

மஹாத்மா அந்தருக்கு நமஸ்காரமுலு பெட்டுதானு முரளீதரா
நாமஸங்கீர்த்தன தானிக்கு தனிக நமஸ்காரமு பெட்டுதானு முரளீதரா
மீரு அந்தரு பாகவதாளு ஒக்கட்டினே காதா! அந்தருக்கும் நமஸ்காரமு
பெட்டுதானு முரளீதரா
மன குரு யோகிகாருக்கு மீருக்கு நமஸ்காரமு பெட்டுதானு முரளீதரா

அந்தரு அந்தரு மீரு செப்பேதி சேயவலன முரளீதரா
தானி ஒக்கட்டிக்கே நேனு பிரஸித்திச்சானு முரளீதரா
மீரு தகா நேனுக்கு ஜாஸ்தி பக்தி காதோ முரளீதரா
இப்புடுவோ பயபக்தி அண்ட உன்னதே முரளீதரா

ஜய் யோகிராம்சுரத்குமார காரு வாரு

திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம Lifetime Trustee நீதியரசர் ஜஸ்டிஸ் ஸ்ரீஅருணாசலம் அவர்கள் ஸ்ரீஸ்வாமிஜியின் திருவடிகளில் சமர்ப்பித்தது.

சுவையான பல ரகமுள்ள ஆகாரங்களை சாப்பிட்டுகொண்டே, மனதை அடக்க முயற்சிப்பது எதைப்போன்றது என்றால், ஒருவன் தான் ஒரே நேரத்தில் உட்காரவும் வேண்டும், நிற்கவும் வேண்டும் என்பதற்கு ஆசைப்படுவது போன்று ஆகும்.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

# மதுரமான மஹனீயர் – 183

(டாக்டர். ஆ.பாக்யநாதன்)

பகவானை அடைவதற்கு மிகவும் சுலபமான வழி இறை நாமகீர்த்தனம். அதைத்தான் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பல சத்சங்கங்களிலும், பக்த சரித்திர உபன்யாசங்களிலும், பல்வேறு புத்தகங்கள் மூலமாகவும் எடுத்து சொல்லி வருகிறார்கள். சமீபத்தில் சென்னை நாரதகானசபாவில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் "ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்" தலைப்பில் கிருஷ்ண லீலைகளை உபன்யாசம் செய்தார்கள். பின்னர் அது ஸ்டார் விஜய் டி.வி.யில் ஒளிபரப்பாகியது. அதை உலகம் முழுவதும் பார்த்த ஏராளமான அன்பர்கள், ப்ருந்தாவனம் சென்று கண்ணன் எனும் அமுதத்தை பருகிய ஆனந்தத்தை அடைந்தனர். அப்படியே சென்ற மாதம், ஸ்ரீஸ்வாமிஜி மஹாராஷ்டிர தேசத்திற்கு யாத்திரை சென்று, அங்கு வாழ்ந்த மஹாபக்தர்களான துக்காராம் மஹாராஜ், ஏகநாத மஹாராஜ் போன்ற பலரின் சரித்திரங்களை, அவர்கள் வாழ்ந்த இடங்களுக்கே சென்று தமது தேனினும் இனிய மொழிகளாலே எடுத்து சொன்னார்கள். அதுதான் இப்பொழுது "வீடு தேடி வருவான் விட்டலன்" என்ற தலைப்பில் ஸ்டார் விஜய் டி.வி. வழியாக, பண்டரி விட்டலனையே, நம் வீட்டிற்கு தினமும் அழைத்து வந்து கொண்டிருக்கிறது. அந்த யாத்திரையின்பொழுது, ஸ்ரீஸ்வாமிஜி பல அரிய தகவல்களை பகிர்ந்து கொண்டார்கள். அதில் அபூர்வமான ஒன்றை பற்றி இவ்விதழில் தெரிந்து கொள்வோம்.

கோவிலுக்கு நாம் அர்ச்சனை செய்வதற்கு அடிக்கடி செல்வதுண்டு. அப்பொழுது நம்மிடம் இருந்து அர்ச்சனை சாமான்களை பெற்று கொண்ட அர்ச்சகர், நம்முடைய கையில் சிறிது நீரை விட்டு விட்டு, ஸங்கல்பம் செய்து கொள்வார், நம்முடைய குடும்பத்தின் நன்மைக்காக.

அப்பொழுது நம்முடைய பெயர், நட்சத்திரம், கோத்திரம் போன்றவைகளை கேட்டவுடன் "மமோபார்த்த ஸமஸ்த துரித க்ஷயத்வார ..." என்று ஆரம்பிப்பார்கள். இதில் ஸ்வேத வராஹ கல்பம், வைவஸ்வத மன்வந்திரம், கலியுகத்தின் முதல் பாதத்தில் என்று காலத்தை சொல்வார்கள். மேலும் ஜம்பூத்வீபம், பாரத வர்ஷம், பரத கண்டம், மேரு

பர்வதத்தின் தெற்கு பாகத்தில் என்று நாம் வசிக்கும் இடத்தை பற்றி கூறுவார்கள். அதில் "சாலிவாஹனன்" என்ற அரசன் முதல் ஆரம்பிக்கப்பட்ட ஸஹாப்தத்தில் வசிக்கின்றேன் என்றும் வரும். பிறகு வருடம், அயனம், திதி, வாரம், நட்சத்திரம், யோகம் , கரணம் என்று போகும். இப்படிப்பட்ட இடத்தில், இப்படிப்பட்டதான தினத்தில், நான் என்னுடைய நன்மைக்காகவும், பகவானுடைய ஒரு பிரியத்தை சம்பாதித்துக் கொள்வதற்கும், இந்த பூஜையை செய்கின்றேன் என்பதுதான் அந்த ஸங்கல்பத்தின் முழுமையான பொருள் ஆகும்.

இந்த சாலிவாஹனன் என்ற ராஜா, பிரதிஷ்டானபுரம் என்ற நகரத்தைத்தான் தலைநகராக கொண்டு ஆண்டு வந்தார். இந்த பிரதிஷ்டானபுரத்திற்கு இன்றைய பெயர் பைடன். இது மஹாராஷ்டிரத்தில் உள்ளது. இன்று நாம் அங்கு சென்றாலும், அந்த அரசன் ஆண்டு வந்த பழைய அரண்மனையின் இடிபாடுகள் காணப்படுகின்றன. இன்றும், அந்த அரசனுடைய பெருமையை பறை சாற்றும் கீர்த்தி ஸ்தம்பம் ஒன்றும் அங்குள்ளது. கோதாவரி நதிக்கரையில் அமைந்துள்ளது இந்த கீர்த்தி ஸ்தம்பம். கோதாவரியில் எவ்வளவு பெரிய வெள்ளம் வந்தாலும், அது இந்த கீர்த்தி ஸ்தம்பத்தை மூழ்கடிக்காது. "எப்பொழுது கோதாவரியில் வெள்ளம் பெருக்கெடுத்து வந்து, இந்த கீர்த்தி ஸ்தம்பத்தை மூழ்கடிக்கின்றதோ, அப்பொழுது உலகம் ஒரு முடிவுக்கு வரும்" என்பது அங்குள்ள பெரியோர்களிடையே காலங்காலமாக வழங்கி வரும் ஒரு நம்பிக்கை. பிரதிஷ்டானபுரியில் காணப்படும் பழைய கல்வெட்டுக்களில் "சாலிவாஹனபுரி" என்ற பெயர் காணப்படுகின்றது. பூனாவிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது இந்த நகரம். இதற்கு தக்ஷிணகாசி என்ற சிறப்பு பெயரும் உண்டு. மேற்கண்ட, பலருக்கும் தெரியாத ஒரு அரிய விஷயத்தை, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் யாத்திரையின்பொழுது தெரிவித்தார்கள்.

முன் அட்டை: ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பெங்களூர் சுந்தர ஆஞ்சநேயர் கோவிலில்;
பின் அட்டை: மாதுரி ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதன் வசந்தோத்ஸவத்தில்



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: பாவம் (BHAVAM) என்றால் என்ன?

பதில்: சிறுவன் ஒருவன், தன்னுடைய மாமாவின் வீட்டிற்கு அடிக்கடி செல்வான். அந்த மாமாவிற்கு ஒரு பெண் உண்டு. அவளுடன் சண்டை பிடிப்பான். அவளை அழவிடுவான். அவளுடன் சேர்ந்து வெளியில் செல்வான். பல நாட்கள் பல மணிநேரங்கள் சேர்ந்தே அவர்கள் பழகுவார்கள். பல Subjectகளை பற்றி பேசுவார்கள். அவர்கள் சற்றும் எதிர்பார்க்காதபடி, பெரியவர்கள், அவர்களுக்கு திருமணம் பேசி, முடிவும் செய்துவிட்டார்கள். இது தெரிந்தவுடன், இவர்கள் ஒருவரை ஒருவர் இப்பொழுது பார்ப்பது, பேசுவது, பழகுவது எல்லாவற்றிலும் ஒரு மாற்றம் வந்துவிட்டது. அவர்களுக்கே கூட, அது ஏன் என்று தெரியவில்லை. ஆதியிலிருந்து பழகியவர்கள்தானே? இந்த மாதிரியான மாற்றங்கள் மனதில் தோன்றுவதற்குத்தான் பாவம் (BHAVAM) என்று பெயர். திருமணம் பேசி முடிப்பதற்கு முன், அவர்களிடையே இருந்த பாவம் (BHAVAM) என்பது வேறு. இப்பொழுது அவர்களிடையே ஏற்பட்டிருக்கும் பாவம் (BHAVAM) என்பது வேறு.

கேள்வி: நாம ஸங்கீர்த்தனம் தொடர்ந்து விடாமல் செய்து வந்தாலே பகவானுடைய தரிசனம் கிடைக்குமா?

பதில்: நாம் வைராக்கியத்துடனும், சுத்தமான ஹிருதயத்துடனும், பகவானுடைய தரிசனம் வேண்டும் என்ற குறிக்கோளுடன் செய்தால் சீக்கிரமாக பகவானுடைய தரிசனம் கிடைக்கும். மற்றபடி, முதலில் நாம் செய்யும் கீர்த்தனம், நம்முடைய பாவங்களை போக்கி பக்தியையும் வைராக்கியத்தையும் கொடுத்து, பின்பு பகவத் தரிசனத்தை செய்து வைக்கும்.

கேள்வி: வீட்டில் தனியாக நான் மட்டும் இருப்பதற்கு பயமாக உள்ளது!

பதில்: உபநிடதமோ இரண்டாவது இருந்தால்தான் பயம் என்று

கூறுகின்றது. தாங்களோ தனியாக இருப்பதற்கு பயமாக இருக்கின்றது என்கின்றீர்களே!

கேள்வி: என் நண்பர் ஒரு நாத்திகர். அவர் கடவுளை காட்ட முடியுமா என்று என்னை அடிக்கடி தொந்திரவு செய்கின்றார். அவருக்கு நான் என்ன பதில் சொல்வது?

பதில்: அவரிடம் சொல்லுங்கள், "ஆஸ்திகர்களே, இன்னும் கடவுளை பார்த்தபாடில்லை. அவர்கள் பார்த்தபிறகு, உங்களுடைய நண்பருக்கு காட்டுவதை பற்றி யோசிக்கலாம் என்று".

கேள்வி: இந்து மதம் மட்டும்தான் மற்ற எல்லா மதங்களையும் ஏற்றுக் கொள்கின்றது. மற்ற மதங்கள் அப்படி செய்வதில்லையே. ஏன்?

பதில்: இது ஒன்றே, அந்த மதத்தை சேர்ந்தவர்கள் ஞானத்தின் முடிவான நிலைக்கு செல்வதில்லை என்பதற்கு, போதுமான சான்று.

கேள்வி: மனதை எவ்வளவு பிரயத்தனப்பட்டாலும், அடக்க முடியவில்லையே? மனதை அடக்க என்ன வழி?

பதில்: பில்லியன் (Billion)தடவை மனதை அடக்க முயற்சித்தும், அது முடியாத போதும், அடுத்த முறை முயல்வது ஒன்றுதான் மனதை அடக்க வழி.

கிருஷ்ணனாகிய தந்தை, தன்னுடைய அபரிமிதமான ஞானம் என்னும் செல்வத்தை தன் குழந்தைகளான நமக்கு தர சித்தமாக உள்ளான். அதற்கு நமக்குத்தான் உரிமை உள்ளது. அதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம், அவனை அனுசரித்து வாழ வேண்டியதுதான். தந்தையை அனுசரிக்காமல் வீட்டை விட்டு ஓடும் குழந்தையை போல, சிலர் தன் முயற்சியால் ஞானத்தை சம்பாதித்துக் கொள்ள முயல்கின்றனர்.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி



# பாகவத பழம் (15)

**பாகம் 2 – அத் 4**

– ஸ்ரீஸ்வாமிஜி

இப்படி ஸூத பௌராணிகர் கூறியதைக் கேட்டு ரிக்வேதியும், தீர்கஸத்ரம் என்ற யாகம் செய்தவரும், மஹரிஷிகளுக்குள் முக்கியமானவருமான சௌனகர் தனக்குள் இருக்கும் சந்தேகங்களை நம் பொருட்டு கேட்கலானார். "கதைகள் சொல்வதில் சமர்த்தரான தாங்கள் எங்கள் பொருட்டு அவசியம் பாகவதம் சொல்லவேண்டும். அதே சமயத்தில், எந்த யுகத்தில் என்ன காரணத்தால், இந்தக் கதை நடந்தது என்பதையும், வியாஸ பகவான் யாரால் தூண்டடப்பட்டு, எதன் பொருட்டு ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்தார் என்பதையும் சொல்ல வேண்டும்'' என்றனர்.

வியாஸரின் புத்திரரான சுகரோ ஜீவன்முக்தர். ஒரு சமயம் ஒரு குளத்தில், ஸ்திரீகள், ஆடைகள் கலைந்தவர்களாக ஸ்நானம் செய்துகொண்டிருந்தார்கள். அவ்வழியாக திகம்பரராக, முதலில் சுகர் சென்றார்.

*த்ருஷ்ட்வா நுயாந்தம் ரிஷிம் ஆத்மஜம் அப்யநக்னம்।*
*தேவ்யோ ஹ்ரியா பரிததுர் ந ஸூதஸ்ய சித்ரம்।*
*தத் வீக்ஷ்ய ப்ருச்சதி முனௌ ஜகதுஸ்தவாஸ்தி*
*ஸ்த்ரீ பும்பிதா ந து ஸூதஸ்ய விவிக்த த்ருஷ்டே: ॥ (1.4.5)*

ஒரு ஜீவன்முக்தரை பிரதக்ஷிணம் செய்தால், பூபிரதக்ஷிணம் செய்த பலன் கிடைக்குமே என்று அந்த ஸ்திரீகள், ஆடைகள் கலைந்திருந்தபோதும் ஓடி வந்து சுகரை பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரித்தனர். அவரைத் தொடர்ந்து வியாஸர் வர, அவரைப் பார்த்தவுடன் வெட்கம் மேலிட்டு தங்கள் ஆடையை சரிசெய்து கொண்டார்கள் என்பதை நான் கேள்விப்பட்டதுண்டு. இதைப் பார்த்து ஆச்சர்யமடைந்த வியாஸர், அந்த ஸ்திரீகளைப் பார்த்து அதற்கான காரணத்தைக் கேட்கலானார். அதற்கு அந்த ஸ்திரீகளோ, உங்களுக்கு

மனதில் இன்னும் ஸ்திரீ புருஷ பேதம் இருக்கின்றது. ஆகவே, உங்களைப் பார்க்கும்பொழுது எங்களுக்கு வெட்கம் ஏற்படுகின்றது. ஆனால், தங்களுடைய குமாரர் யுவாவாக இருந்தாலும், அவருடைய மனதில் ஸ்திரீ புருஷ வித்யாசமே இல்லாததால், எங்களுக்கும் எதுவும் தோன்றவில்லை என்று பதில் அளித்தார்கள்'' என்றார்.

இது ஏன் இங்கு கூறப்படுகின்றது? ஸாக்ஷாத் நாராயணனுடைய அவதாரம் வியாஸர், வேதத்தை அனுக்ரஹித்தவர். அப்படிப்பட்ட வியாஸரைப்பற்றி இப்படி கூறுவதன் காணம் என்ன? வியாஸர் மீதுள்ள மரியாதையைக் குறைப்பதற்காக அல்ல. இளம் வயதுடையவராக இருந்தும், திகம்பரராக இருந்தும் யாரைப் பார்த்து ஆடை கலைந்தவர்களாக நீராடிக்கொண்டிருந்த ஸ்திரீகளுக்கு மனதில் எந்த விகாரமும் ஏற்படவில்லையோ, அந்த சுகர் ராஸம் சொல்லப் போகின்றார் என்பதை மனதில் நிறுத்திக்கொண்டு, ஸ்ரீமத் பாகவதத்தைப் படிக்கவேண்டும் என்பதே காரணம்!

"பசுவின் மடியிலிருந்து பாலானது, பாத்திரத்தில் விழும் நேரம் கூட சுகர் ஒரு வீட்டு வாசலில் தங்கமாட்டார் அல்லவா? அதுவும் மூடன் போன்றும், பைத்தியம் போன்றும் தோன்றுபவரும், குரு, ஜாங்கலம் போன்ற இடங்களை அடைந்தவருமான அவரை ஹஸ்தினாபுரம் நகர மக்கள் எப்படி புரிந்துகொண்டார்கள்? பரமபாகவதனான பரீக்ஷித்தின் கதையைக் கேட்கவும் நாங்கள் ஆவலாக உள்ளோம். இளம் வயதினரும், எதிரிகளால் கப்பம் கட்டப்படும் ராஜ்யத்தை உடையவருமான பரீக்ஷித், அவற்றையெல்லாம் உதறிவிட்டு, உயிரையும்விடத் துணிந்து எதற்காக கங்கைக் கரைக்கு வந்தார்? அவருக்கு எதற்காக சுகர் பாகவதம் சொன்னார்? தாங்கள் இது விஷயமாகக் கேட்டதையெல்லாம், எங்கள் பொருட்டு விரிவாகச் சொல்லவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். வேதத்தைத் தவிர மற்றவற்றை எடுத்துரைப்பதில் சாமர்த்தியம் தங்களுக்குத்தான் இருப்பதாக நினைக்கின்றேன்" என்றார்.

துவாபரயுகத்தின் ஆரம்பத்தில் வாஸவிக்கும், பராசரருக்கும்

ஸ்ரீஹரியினது அம்சமாக ஞானியான வியாஸர் தோன்றினார். ஒரு சமயம் ஸரஸ்வதி நதிக்கரையின் ஓரத்தில் ஸ்நானம், ஆசமனம் செய்து முடித்து சூர்யோதயகாலத்தில் வியாஸ பகவான் தனிமையில் அமர்ந்திருந்தார். அப்பொழுது த்ரிகால ஞானியான வியாஸ பகவான், வர இருக்கின்ற கலியுகத்தின் போக்கை சிந்திக்கலானார்.

*பௌதிகானாம் ச பாவானாம் சக்தி ஹ்ராஸம் ச தத்க்ருதம் ।*

*அஸ்ரத்ததானான் நி:ஸத்வான் துர்மேதான் ஹ்ரஸிதாயுஷ:" ॥ (1.4.17)*

கலியுகத்தில் மக்கள் சரீர பலம் இல்லாதவர்களாகவும், சிரத்தை இல்லாதவர்களாகவும், தைரியம் இல்லாதவர்களாகவும், பக்தி இல்லாதவர்களாகவும், அற்பமான ஆயுளை உடையவர்களாகவும், மந்த பாக்கியம் உள்ளவர்களாகவும் இருக்கப் போவதைப்பார்த்தார். இதனால் ஒருவராலேயே வேதமனைத்தையும் படிக்க முடியாது என்பதை உணர்ந்தார். வேதத்தை நான்காகப் பிரித்தார். அவை ரிக், யஜுர், ஸாமம், அதர்வண வேதங்களாகும். ரிக் வேதத்தை ரக்ஷிக்கும் பொறுப்பை பைலரிடமும், ஸாம வேதத்தை ரக்ஷிக்கும் பொறுப்பை ஜைமினி என்ற முனிவரிடமும், யஜுர் வேதத்தை ரக்ஷிக்கும் பொறுப்பை வைசம்பாயனர் என்பவரிடமும், அதர்வண வேதத்தை ஸுமந்து என்ற மஹரிஷியிடமும் கொடுத்தார். இதிஹாஸ புராணங்களை ரக்ஷிக்கும் பொறுப்பை எனது தந்தையான ரோமஹர்ஷணரிடமும் கொடுத்தார். இந்த ரிஷிகள் மேலும் இந்த வேதத்தைப் பல சாகைகளாகப் பிரித்து தங்களுடைய சிஷ்ய பரம்பரையினரால், இன்று வரை ரக்ஷித்து வரும்படி

*கலியுகத்தில் மக்கள் சரீர பலம் இல்லாதவர்களாகவும், சிரத்தை இல்லாதவர்களாகவும், தைரியம் இல்லாதவர்களாகவும், பக்தி இல்லாதவர்களாகவும், அற்பமான ஆயுளை உடையவர்களாகவும், மந்த பாக்கியம் உள்ளவர்களாகவும் இருக்கப் போவதைப்பார்த்தார்.*

செய்தார்கள். வேதத்தைப் படிக்க முடியாதவர்களுக்காக ஐந்தாவது வேதமாக மஹாபாரதத்தை செய்தார். இவ்வளவு செய்தும், அவருடைய மனதில் பூர்ணமாக சாந்தி ஏற்படவில்லை! எப்படி ஒவ்வொருவருடைய ஹ்ருதயத்திலும் பூர்ணமான ஆத்மா இருந்தும், ஒவ்வொருவரும் அதை அறியாதவர்களாக தன்னை அபூர்ணமாக நினைத்துக் கொள்கிறார்களோ, அதுபோல் உள்ளது இது. இப்படி மனக்கிலேசத்துடன் அவர் அமர்ந்திருந்தபொழுது, நாரத மஹரிஷி தற்செயலாக "நாராயண" நாம கீர்த்தனம் செய்துகொண்டே அங்கு வந்தார். வியாஸரே ஸ்வயம் பகவானாக இருந்தபோதிலும் தன்னுடைய ஆஸ்ரமம் தேடி வந்த நாரதரை வரவேற்று, அமர்த்தி விதிப்படி அவரை பூஜையும் செய்தார்.

**அத்தியாயம் 5**

அப்படி தெய்வச் செயலாக வந்து சேர்ந்த நாரதர் சுகமாக அமர்ந்து கொண்டார். அப்படி அமர்ந்து கொண்டவுடன், தன் அருகில் கவலையுடன் அமர்ந்திருக்கும் வியாஸ பகவானைப் பார்த்து இலேசாக புன்முறுவல் பூத்தபடியே பேசலானார்: "பாராசர்ய மஹாபாக" என்று வியாசரை அழைக்கிறார். அவர் செய்த பாக்யம் என்னவென்றால் பகவான் அவரை பாகவதம் இயற்றுவதற்காக தேர்ந்தெடுத்ததே. வியாஸரே, தாங்கள் ஏன் சற்று வாட்டமாகக் காணப்படுகிறீர்? என்று பேச ஆரம்பித்தார் நாரதர்.

(கனியும்)

தவறை ஒப்பு கொள்வது உயர்ந்தது. அதை மீண்டும் நிகழ விடாமல் தடுக்க வழிமுறையை தேடுவது அதைவிட உயர்ந்தது. அப்படி கண்டறிந்ததை நடைமுறைப்படுத்துவது அதைவிட உயர்ந்தது.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

## இறைவன் அரு

– ஸ்ரீஸ்வாமிஜி

ஒரு தம்பதிகளுக்கு பகவான் அருளால், ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தையை செல்லமாக வளர்த்து வந்தனர். அந்த குழந்தைக்கு நல்ல வரனாக பார்த்து, கல்யாணம் செய்து வைக்க பெற்றோர்கள் முயற்சித்தனர். மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்த பிறகுதான், அது அவ்வளவு சுலபமான காரியமில்லை என்று புரிந்தது. ஜாதகம் சேர்ந்திருந்தால், பையனுக்கு படிப்பில்லை. படிப்பு நன்றாக இருந்தால், உத்யோகம் நல்லதாக இல்லை. உத்யோகம் நன்றாக இருந்தால், குடும்பம் சரியில்லை. எல்லாம் சேர்ந்து ஒன்று போல் அமைவதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது.

ஒரு வழியாக கல்யாணம் நிச்சயமாகி விட்டது. ஆனால், கல்யாணம் நடத்துவதற்கும் பெண்ணிற்கு நகைகள், புடவைகள், சீர்வரிசைகள் என்று பட்ஜெட் அதிகமாக இருந்தது. அவர் சேர்த்து வைத்துள்ள பணத்தை விட கல்யாணத்திற்கு ஐந்து மடங்கு அதிகமாக தேவைப்பட்டது. தம்பதியர்கள் கவலையே படவில்லை. "எனக்கு தெரிந்த ஒரு நண்பர் உள்ளார். அவர் எவ்வளவு கேட்டாலும் பணம் தருகிறேன் என்று சொல்லி உள்ளார்" என்று கணவன் மனைவியிடம் சொன்னார். மனைவியோ, "என் அண்ணனுக்கு என் மீது மிகவும் ஆசை; நான் என்ன கேட்டாலும் தருவார்" என்று கணவனிடம் கூறினாள். கணவன் மனைவியிடம், "நமக்கு ஒரு Insurance Claim வரவேண்டி உள்ளதே, அது வந்து விட்டால் போதும்" என்றார். கணவனும் மனைவியும் சேர்ந்து, மிகவும் மகிழ்ச்சியாக கல்யாண ஏற்பாடுகளை செய்து வந்தார்கள்.

ஆனால் பணம் தருவதாக சொன்னவர்கள், இன்று, நாளை என்று, இழுத்தடித்தார்கள். "இன்று வந்து விடும் நாளை வந்து விடும்" என்று நம்பிக்கையோடு பிரார்த்தனை செய்து வந்தவர்களுக்கு நாளாக நாளாக கவலை வர ஆரம்பித்தது. கல்யாணம் நடக்குமோ, நின்று விடுமோ என்ற கவலை வந்து விட்டது. இல்லை! இல்லை! நடந்து விடும் என்று தைரியமாக இருந்தார்கள். இறைவனை பிரார்த்தித்து வந்தார்கள். ஆனால், நாளை மறுநாள் கல்யாணம் நெருங்கி விட்டது. பணம் வரும்

வழியாக இல்லை. அவர்கள் இருவரும் அழுதார்கள்; புரண்டார்கள். இறைவனிடம் மன்றாடினார்கள். "தன்னுடைய அன்புமகள் கல்யாணம் எப்படியாவது நன்றாக நடக்க வேண்டும்" என்றார்கள். "அவமானம் ஆகி விடும்; இந்த கல்யாணம் நடக்காமல் நின்று விட்டால், தன் குழந்தையோ தாங்களோ உயிர் வாழ முடியாது" என்று புலம்பினார்கள். கல்யாணம் முடிவு ஆன அன்றில் இருந்து, பிரார்த்தனை செய்து வந்திருந்தாலும், அப்பொழுது செய்த பிரார்த்தனைக்கும், இப்பொழுது செய்யும் பிரார்த்தனைக்கும் பெரிய வித்தியாசம் இருக்கின்றது. அப்பொழுது தன் முயற்சி ஏதோ ஒரு விதத்தில் பலித்து விடும் என்ற எண்ணத்தோடு கூடிய பிரார்த்தனை. ஆனால் தன் முயற்சி எதுவும் பலிக்கவில்லை; பலிக்கவும் போவதில்லை என்ற நிலையை உணர்ந்த பிறகு செய்யும் பிரார்த்தனை இது.

இதே போல்தான் பகவானை அடைய துடிக்கும் ஒருவனுடைய நிலையும். முதலில் நான் கோடி கணக்கில் ஜபம் செய்து பகவானை அடைந்து விடுவேன் என்று நினைக்கின்றான்; ஜபம் செய்து செய்து பார்க்கின்றான்; ஒன்றும் முடியவில்லை; தியானம் செய்து பார்க்கின்றான்; பல வருடங்களாக கண்களை மூடி மூடி உட்கார்ந்து பார்க்கின்றான்; அந்த கோவிலுக்கு போகின்றான்; புண்ய தீர்த்தங்களில் குளிக்கின்றான்; வேதாந்தம் படித்து பார்க்கின்றான்; அங்கு ஒரு மஹாத்மா, இங்கு ஒரு மஹாத்மா என்று போய் பார்க்கின்றான்; இவ்வளவும் செய்த பிறகு சற்று யோசித்து பார்த்தால், வயது ஆனதுதான் மிச்சம்; உடலில் வியாதி வந்ததுதான் மிச்சம்; ஆரம்பத்தை விட இப்பொழுது பார்த்தால் தியானம், பக்தி எல்லாம் ஒரு படி கூட வளர்ந்ததாக தெரியவில்லை; மாறாக குறைந்து விட்டதோ என்றுதான் நினைக்க தோன்றுகின்றது; வயதும் ஆகிக் கொண்டே இருக்கின்றது; FINAL EXAM இல் பாஸாகவில்லை என்றால், OCT, MARCH என்று பார்த்து கொள்வதுண்டு; அதுபோல், இந்த பிறவியில் இல்லை என்றால் அடுத்த பிறவிகளில்தான் பார்த்து கொள்ள வேண்டும்.

இந்த நிலையை நன்றாக அனுபவத்தில் உணர்ந்த சாதகன், இந்த பிறவி வீணாகி விடுமோ என்ற பயத்தினால் உந்தப்பட்டும், தன் முயற்சி

எதுவும் பலிக்காததை நினைத்தும், வேறு உபாயம் எதுவும் தெரியாததால், கதறி அழுது துடிக்கின்றான். அந்த ஒரு நிலையிலேயே, அவனுக்கு உண்மையான பக்தி ஸித்திக்கின்றது. பகவானுடைய அருளும் கிடைக்கின்றது.

ஓம்கார் என்ற ஒரு ஸாது இருந்தார். அவர் ஆறு வருடங்கள் தொடர்ந்து மௌனமாக இருந்தார். ஒரு அன்பர் அவரிடம், தங்கள் ஆறு வருடகால மௌன அநுபவத்தை எனக்கு கூற வேண்டும் என்று கேட்டார். அதற்கு அந்த ஸாது, "அந்த ஆறு வருட மௌனமும் எனக்கு ஆறு நிமிடங்கள் போல் கழிந்தது என்பதை தவிர சொல்வதற்கு வேறு ஒன்றும் இல்லை" என்றார்.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

SRI HARI:

PRANAMS TO THE LOTUS FEET OF HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI

**Buddies**
Infotech Pvt Ltd

OUR SOLUTIONS

- WEB DEVELOPMENT
- SOFTWARE DEVELOPMENT
- WEB MARKETING
- MOBILE SOLUTIONS

Buddies Infotech Pvt Ltd
KG Marina Bay,No.75 & 77, Ground Floor,
Santhome High Road,Santhome,
Chennai 600 004
Phone: +91-44-43033313

E-mail: contact@buddiesinfotech.com

## குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி ஆண்டு விழா -தூத்துக்குடி

ஸ்ரீஸ்வாமிஜியின் பூரண அருளாசிகளுடன் குளோபல் ஆர்கனைஸேஷன் ஃபார் டிவினிடி இந்தியா டிரஸ்டின் ஆண்டு விழா ஏப்ரல் 30, மே 1 ,2 தேதிகளில் மிக சிறப்பாக நாமமுத்து நகரான தூத்துக்குடியில் அழகர் மஹாலில் நடைபெற்றது. குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடியின் சத்சங்கத்தை சார்ந்த பல அன்பர்கள், இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், குறிப்பாக தமிழகமெங்கிலிருந்தும் முந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் வந்திருந்தனர். கோடை வெய்யிலையும் பொருட்படுத்தாமல் பல நாமத்வார் அன்பர்கள் தங்கள் குழந்தைகளுடன் வந்திருந்தது "இது ஒரு பெரிய நாம குடும்பம்" என்பதை பறை சாற்றும் விதமாக அமைந்திருந்தது.

இவ்விழாவை ஒட்டி ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தந்த அருளாசி பின்வருமாறு அமைந்திருந்தது. "இந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரா, மஹாராஷ்டிரம், டெல்லி மற்றும் உலகில் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, மலேசியா, இங்கிலாந்து, சிங்கப்பூர், அரபு நாடுகள், இந்தோனேசியா, பிஜி தீவுகள், ஜெர்மனி, பின்லாந்து என உலகெங்கிலும் பல தேசங்களில் மஹாமந்திரத்தின் இனிய ஒலி கேட்டு வருகிறது. சிறு இல்லங்களில் சத்சங்கங்கள் நடக்கின்றன. பெரிய ஸ்தாபன அளவிலும் சத்சங்கங்கள் நடக்கின்றன. இவற்றில் தன்னலமற்ற பல அன்பர்கள் பக்தி பூர்வமாய் மஹாமந்திரத்தை உலகெங்கும் ஒலிக்க செய்ய வேண்டும் எனும் என் ஆசையை மனதில் கொண்டு அதை பூர்த்தி செய்ய பாடுபட்டு வருகின்றனர். இதில் சாதாரண தொழிலாளியிலிருந்து பெரிய நிறுவனங்களில் பணிபுரியும் அன்பர்கள் வரை அனைவரும் பங்கேற்று வருகின்றனர். அவர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் ஏற்படும் இன்னல்களையும் பொருட்படுத்தாது, தியாக புத்தியுடன் குருகைங்கர்யத்திற்காகவும் நாமசேவைக்காகவும் பணிபுரிந்து வருகின்றனர். அவர்கள் செய்யும் மஹாமந்திர கீர்த்தனம் இறைவனின் காதுகளில் விழுவது ஒருபுறமிருக்கட்டும்; அதை நான் பூரணமாகவே அறிந்திருக்கிறேன். மஹாமந்திரத்திற்காக அர்ப்பணிக்கப்படும் ஒவ்வொரு செயலையும்

நான் அறிந்தே இருக்கிறேன். இவ்வன்பர்களின் அன்பும் சேவையும் என்னை மிகவும் மகிழ்விக்க செய்கிறது. எனது பூரண ஆசிகளும் பிரார்த்தனையும் அன்பும் இவ்வன்பர்களுக்கும் அவர்கள் குடும்பத்திற்கும் என்றும் இருக்கும்" என்றார்கள்

இவ்விழாவில் முதலில் பாலாஜிராமச்சந்திரன்ஜி மற்றும் முரளிஜி ஆகியோர் வந்திருந்த அனைவரையும் வரவேற்றும் நாம மஹிமை குறித்தும் பேசினர். பின்னர், பாக்யநாதன்ஜி ஸ்ரீஸ்வாமிஜியின் வழிகாட்டுதல்படி நடைபெற்று வரும் பல அறக்கட்டளைகளின் செயல்பாடுகள் குறித்தும், ராமானுஜம்ஜி குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி மற்றும் நாமத்வாரின் செயல்பாடுகள் குறித்தும் பேசினர். பின்னர் பாக்யநாதன்ஜி மற்றும் ராமானுஜம்ஜி அன்பர்களின் ஐயங்களுக்கு விளக்கமளித்தனர்.

வெங்கடேஸ்வரன்ஜி ஸ்ரீஸ்வாமிஜியின் உபன்யாசங்களில் இருந்தும், பூர்ணிமாஜி ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனங்களிலிருந்தும், பாலாஜி ராமச்சந்திரன்ஜி நாமத்வார் அமைப்பு குறித்தும் வினா-விடை நிகழ்ச்சிகளை தொகுத்து அழகாக அமைத்திருந்தனர். இதில் பங்குபெற்ற அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. கோலாஹலமாக நடைபெற்ற இவ்விழாவில் குழந்தைகள் அசத்திய தூத்துக்குடி அன்பர்களின் சாந்த சக்குபாய், ஸ்ரீபம்மல் பாலாஜி அவர்களின் ஆலோசனைப்படி மஹாரண்யம் சுற்றியுள்ள கிராம அன்பர்கள் நடத்திய பத்ராசல ராமதாசர், அம்பாசமுத்திரம் குழந்தைகளின் மார்க்கண்டேயன், துருவன் ஆகிய நாடகங்கள் மிக மிக அருமையாக இருந்தது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீஸ்வாமிஜியின் "கலியையும் பலி கொள்ளும்" மஹாமந்திர கீர்த்தனம், கலி தர்ம உந்தியார், கீர்த்தனங்கள் என பலவற்றிலும் நாமத்வார் அன்பர்களின் குழந்தைகள் சக்கை போடு போட்டது ஆச்சரியமாய் இருந்தது. இவ்விழாவில் அனைவருக்கும் அன்னதானம் செய்யப்பட்டது. இவ்வாண்டு விழாவை சத்யநாராயணன்ஜி, ராமச்சந்திரன்ஜி மற்றும் பல நிர்வாகிகள் மிக சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தனர். தூத்துக்குடியில் இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை திரு.கதிரேசன் குடும்பத்தினர் மிக அழகாக செய்திருந்தனர்.

GOD
Global Organisation for Divinity

குளோபல் ஆர்கனைஸேஷன் ஃபார் டிவினிடி இந்தியா டிரஸ்டு வழங்கும்

பரனூர் மஹாத்மா ஸ்ரீஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள்

அருளிய "கோவிந்த சதகம்"

பிரவசனம் நிகழ்த்துபவர்: ஈரோடு ஸ்ரீபாலாஜி பாகவதர்

இடம்: தத்வலோகா, 76, எல்டாம்ஸ் சாலை,
தேனாம்பேட்டை, சென்னை

**தேதி: ஜூன் 8 முதல் ஜூன் 14 வரை**
**நேரம்:** 6.30PM- 8.30PM

அனைவரும் வருக! திருவருள் பெறுக!

OUR HUMBLE PRANAMS TO SRI SWAMIJI

**WE HANDLE ALL TRAVEL RELATED SERVICES**

1. DOMESTIC INTERNATIONAL AIR TICKETING
2. VISAS / PASSPORT
3. INSURANCE
4. FOREIGN EXCHANGE
5. HOTEL RESERVATION & RENT A CAR SERVICES
6. OUTBOUND & INBOUND TOUR PACKAGE

**PL CONTACT**

**EURO WORLD TRAVEL PVT. LTD**

26, FIRST FLOOR, C.P.RAMASWAMY ROAD, ALWARPET, CHENNAI - 600018.
Ph - 9382846979 Ph- 24661228/29, 24671228/29, 24993609/4629
Email - eurotravel@vsnl.net/euroworldtravel@gmail.com

# பாலகர்களுக்கு ஒரு கதை



## கடவுளுக்கு ஒரு கடிதம்

மஹாபாரதத்தில், பீஷ்மரைப் பார்த்து துரியோதனன் கோபப்படுகின்றான். "பீஷ்மரே, என்ன இருந்தாலும், உங்களுடைய மனது பாண்டவர்களுடைய பக்கம்தான் உள்ளது. நீங்கள் நான் கொடுக்கும் உணவை சாப்பிடுகின்றீர்கள். நான் தங்களுக்கு செய்து தரும் எல்லா வசதிகளையும் அனுபவிக்கின்றீர்கள். உடலை நான் கொடுக்கும் வசதிகளால் வளர்த்துக்கொண்டு, உள்ளத்தை மட்டும் பாண்டவர்களிடம் கொடுத்து விட்டீர்கள்" என்கின்றான்.

பீஷ்மர் கோபம் மேலோங்கி "எப்படி நீ இப்படி சொல்லலாம்" என்கின்றார். அதற்கு துரியோதனனோ, "இவ்வளவு நாட்கள் நடந்த யுத்தத்தில் நீங்கள் பாண்டவர்களில் ஒருவரை கூட அடிக்கவில்லையே" என்கின்றான். இதை கேட்டவுடன் பீஷ்மர், "இவ்வளவு நாட்கள் பாண்டவர்கள் உன்னை அடிக்காமல் பார்த்து கொண்டேனே; அதுவே பெரிய விஷயம்" என்கின்றார்.

"கடவுளே! நானும் துரியோதனன் போல், நீங்கள் என்ன செய்தீர்கள்" என்று கேள்வி மேல் கேள்வி கேட்டுக்கொண்டு இருக்கின்றேன். உனக்கு காது இருக்கின்றதா? கண்கள் இருக்கின்றதா? என்று கூட கேட்டதுண்டு. உன்னுடைய அர்ச்சாவதாரம்தான் கல்லா? அல்லது உள்ளமும் கல்லா என்றெல்லாம் நான் கேட்டதுண்டு. விவாதிப்பதும் உண்டு. உன்னை நிந்திப்பதும் உண்டு. நான் எவ்வளவு கேட்டும், மன்றாடியும் நீ எனக்கு எந்த அருளும் செய்யவில்லை என்று நினைப்பதால், சமயத்தில் கடவுளாகிய நீ இருக்கின்றாயா என்று சந்தேகம் கூட எனக்கு உண்டு. ஆனால், நீயோ எனக்கு அருமையான மனிதப் பிறவியை கொடுத்திருக்கின்றாய். கை, கால், மூக்கு, காது, புத்தி போன்றவைகளை சரியாக கொடுத்திருக்கின்றாய்".

"நான் மூர்க்கன்; மட்டி; என்னை நானே பெரிதாக நினைத்து கொள்பவன். இது போன்ற துர்க்குணங்கள் என்னிடம் அநேகம் உள்ளன. சொன்னால் சொல்லிக்கொண்டே போகலாம். இந்த கடிதம் போதாது."

"ஆனால், அப்படிப்பட்ட எனக்கும் ஒரு நல்ல குருவை

தந்திருக்கின்றாய். என் வாயிலும் உனது புனிதமான நாமங்களை வரவழைத்து இருக்கின்றாய். எனக்கும் ஸத்ஸங்கம், புனித யாத்திரைகள், பாகவதம் எல்லாம் கிடைக்க செய்திருக்கின்றாய்".


"எனக்கு அவ்வப்பொழுது பலப்பல கஷ்டங்கள் வருகின்றன. அவ்வளவுதான்! நான் முடிந்தேன் என்று நினைக்கும்பொழுது, கடைசி நிமிடத்தில் ஆபத்பாந்தவனான நீ என்னை காப்பாற்றி விடுகின்றாய். என்னுடைய குற்றங்கள், குறைகள், பாவங்கள், தவறுகள் போன்ற எதையும் கருணையுடன் மன்னித்து, அவற்றை பாராட்டாமல் எனக்கும் பக்தன் என்ற ஸ்தானம் தந்து என்னை கௌரவப்படுத்தி இருக்கின்றாய்".

இவ்வளவு தூரம் அழைத்து வந்த உனக்கு மேலே அழைத்து செல்லத் தெரியாதா? தெரியும். நான் சமர்த்தாக உன் கட்டளைகளுக்கு உடன்பட வேண்டும். அசடு போல் இருக்க கூடாது. நீ என்னை எப்படி வைக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றாயோ, அதற்கு நான் எந்த மறுப்பும் தெரிவிக்காமல் உடன்பட்டு விட்டால், என்னை சுலபத்தில் உன்னிடம் சேர்த்து கொள்வாய் என்றும் தெரிகின்றது. என்னை எப்பொழுதும் உன் அரவணைப்பிலேயே வைத்துக்கொள். ஒருவர் இறுக்க அணைத்துக்கொண்டால், நமக்கு மூச்சு முட்டும்; தவிப்போம். ஆனால், நீ என்னை எவ்வளவுக்கெவ்வளவு இறுக்க அணைத்து கொள்கின்றாயோ, அவ்வளவுக்கவ்வளவு நான் RELAX ஆகி விடுகின்றேன். நீ என்னை நெருக்கி அணைத்து கொள்ள கொள்ள என் அச்சங்கள் தளர்ந்து போவதே அதற்கு காரணம்.

அடுத்த கடிதம் எழுதும் வரையில்
மன்னிக்க வேண்டுகிறேன்
உன் குழந்தை

என் மனதை, அக்ஞானம் என்ற இருளில் கருமையில் மூழ்க அடித்துள்ளாய். ஒருக்கால் நீ வெண்ணெய் திருடி விட்டு ஒளிய இருட்டான இடம் வேண்டும் என்றுதான் இப்படி வைத்துள்ளாயோ?

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி


Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji
Gururam Consulting
Private Limited

## *சென்ற மாத நிகழ்ச்சிகள்*

**ஏப்ரல் 1ஆம் தேதி முதல் மே 18 வரை** மஹாரண்யம் ஸ்ரீகல்யாணஸ்ரீனிவாச பெருமாள் கோவிலில் பகவான் யோகி ராம்சுரத்குமார் பக்தர்களால் "யோகிராம்சுரத்குமார்" நாமகீர்த்தனம் அகண்டமாய் செய்யப்பட்டது.

**ஏப்ரல்22 – மே 2 – மதுரபுரி ஆஸ்ரமத்தில்** மாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனுக்கு வசந்தோத்ஸவம் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் விமரிசையாக கொண்டாடப்பட்டது.

**ஏப்ரல் 30 – பெங்களூர் சுந்தர ஆஞ்சநேயர்.** – சுந்தர ஆஞ்சநேயரின் மூன்றாம் ஆண்டு பிரதிஷ்டா தினத்தை ஒட்டி, ஸ்ரீநவீன்பட் அவர்களின் ஸ்ரீமத்வால்மீகி ராமாயண பாராயணமும் ராமாயண பிரவசனமும் நடைபெற்றது. திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரம நிர்வாகி ஜஸ்டிஸ் ஸ்ரீஅருணாசலம் கலந்து கொண்டு உபன்யாசம் செய்தார்கள். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களும் கலந்து கொண்டு ஆஞ்சநேயருக்கு அபிஷேகம் செய்து, அனைவருக்கும் பிரஸாதம் வழங்கினார்கள். ஆஞ்சநேயர் புறப்பாட்டிலும் கலந்து கொண்டார்கள். 3500அன்பர்கள் பூர்த்தி தினத்தன்று வந்திருந்தனர்.

**ஏப்ரல் 19 முதல் 24 வரை**– குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடியை சேர்ந்த பூர்ணிமாஜி அவர்கள் **சிங்கப்பூர்** சென்று சத்சங்கங்களை நிகழ்த்தி வந்தார்கள். இதில் குறிப்பிடும்படியாக சத்சங்கங்கள் சிங்கப்பூர் ஸ்ரீனிவாசபெருமாள் கோவில் பி.ஜி.பி.ஹாலிலும், ஸ்ரீபாலசுப்ரமணியன், ஸ்ரீமதி மைதிலி கிரிஷ், ஸ்ரீமதி உஷா ரமணன், ஸ்ரீமதி லில்லி நடராஜன், ஸ்ரீராமநாதன் - சுஜாதா தம்பதிகள் மற்றும் பல அன்பர்களின் இல்லங்களிலும் சத்சங்கங்கள் நடைபெற்றன. இவற்றில் பூர்ணிமாஜி மஹாமந்திரத்தின் மகிமை, ஸத்குருநாதரின் மகிமை, பாகவதம் காட்டும் வழி ஆகியன குறித்து பேசினார்கள். இந்நிகழ்ச்சிகளில் பல புதிய அன்பர்கள் பங்கு கொண்டதும், அன்பர்கள் தங்களுக்கு குருநாதரிடத்தும் மஹாமந்திரத்திலும் ஏற்பட்ட அனுபவங்களை பகிர்ந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

**மே 6 – சமஸ்கிருத கல்லூரி** – அக்ஷயதிருதியை தினம் – **சங்கரஜெயந்திவிழாவை** முன்னிட்டு ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளுரை வழங்கினார்கள். அதன்பின், மஹாரண்யம் சாந்தீபனி குருகுல டிரஸ்டின் பிரின்ஸிபால் ஸ்ரீ உ.வே.பாலாஜி அவர்கள் ஸ்ரீஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளின்

"ஆச்சார்ய ஹ்ருதயம்" குறித்து உபன்யாசம் செய்தார்.

**மே 9 – 16** சென்னை **மேற்குமாம்பலம் அயோத்யா மண்டபத்தில்** ஸ்ரீஸ்வாமிஜியின் சீடர் ஸ்ரீ உ.வே. பாலாஜி அவர்களின் **பாகவத உபன்யாசம்** ஜனாபாய் டிரஸ்டு சார்பாக நடைபெற்றது. திரளான அன்பர்கள் வந்திருந்து சிரவணித்து பயனுற்றனர்.

**மே 10 – 16 – மதுரபுரி ஆஸ்ரமத்தில்** உதயாஸ்தமன பாகவத ஸப்தாஹம் நடைபெற்றது. தினமும் காலை 6மணியிலிருந்து மாலை 6மணி வரை பாராயணமும் பிரவசனமும் நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமிஜி அவர்களே உபன்யாசம் செய்தார்கள். பூர்த்தி நாளான நரசிம்ம ஜெயந்தி அன்று மாதுரி ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு கலச நீரால் ஸஹஸ்ரதாரா அபிஷேகம் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களால் செய்யப்பட்டது. சுமார் 500அன்பர்கள் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் அன்னதானம் மிக விமரிசையாக செய்யப்பட்டது. பூர்த்தி தினத்தன்று மாலை நரசிம்ம ஜெயந்தி ஒட்டி, சென்னை கோடம்பாக்கம் பராங்குசபுரம் ஞானாலய மடத்தில் நடந்த சத்சங்கத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கலந்துகொண்டு நரசிம்ம பக்தர்களை பற்றி அருளுரை வழங்கினார்கள்.


The D Studio
www.dexterousinfo.com
Quality is never an accident
It is always the result of intelligent effort
www.vapssky.com
dex gamez
www.dexgamez.com
- Mobile Data Security Systems
- Mobile Enhancement Utilities
- Multimedia Content Exchange
- 3d Multiplayer Games

Roblock
Theft Recovery System for Blackberry - Windows mobile - Sony Ericsson mobile phones

Roblock provides protection and safety from theft or losing your mobile phones and helps to retrieve it back. Now the users can forget the fear of losing their mobile phones by protecting it using Roblock software.

- SMS notification on SIM Change
- Recover contacts from lost phone
- Remote WIPE memory card
- Complete Stealth operations

contact@dexmobile.com
Ph: +91 960019777

**மே 16 – கோவில்பட்டியில் புதிய நாமத்வார் திறப்பு –** நரசிம்ம ஜெயந்தியான இந்த சிறந்த தினத்தில் ஸ்ரீஸ்வாமிஜியின் அருளாசிகளுடன் குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடி இந்தியா சார்பாக வடக்கு புது கிராமம், 26, J.A.3rd st, எம்.ஜி.ஆர். நகர், கோவில்பட்டியில் புதிய நாமத்வார் திறக்கப்பட்டது. இதை சென்னை சத்சங்கத்தை சார்ந்த ஸ்ரீராமச்சந்திரன் முன்னிலையில் சிவகாசி நாமத்வார் பொறுப்பாளர் திருமதி.பவானி கார்த்திகேயன் அவர்கள் மஹாமந்திர ஒலி நிரம்பி இருக்க நாமத்வாரை திறந்து வைத்தார்கள். நூறு அன்பர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில் பல பக்தர்கள் நாம மஹிமையையும், குருநாதர் மஹிமையையும் குறித்து பேசினார்கள். மாலையில் நாமத்வார் அன்பர்கள் மஹாமந்திர கீர்த்தனத்துடன் நகர் வலம் வந்தனர்.

**ஏப்ரல் –மே – ஜெர்மனி மற்றும் ஸ்விட்சர்லாந்து–** குளோபல் ஆர்கனைசேஷன் ஃபார் டிவினிடியை சேர்ந்த ஸ்ரீபரத் அவர்கள் ஏப்ரல் 1,16,17 தேதிகளில் ஜெர்மனியில் நான்கு பிரதான நகரங்களிலும், மே 13, 14 தேதிகளில் ஸ்விட்சர்லாந்தின் ஒரு நகரத்திலும் அமைந்த கோவில்களில் ஸத்குருநாதரின் மகிமை குறித்தும் ஜாதி, மத, இன வேறுபாடற்ற கலியுக தர்மமான மஹாமந்திர கீர்த்தனத்தின் அவசியம் குறித்தும் மிக விரிவாக பேசினார். இவ்விழாக்களில் பல முக்யஸ்தர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. அந்நாடுகளிலும் இந்நிகழ்ச்சிகளுக்கு

பெரிய மருத்துவர்களாலேயே, SCAN, XRAY, LAB TEST போன்றவைகளை செய்த பிறகுதான், ஒருவருடைய ஆரோக்கியத்தை அறிய முடிகின்றது.

கல்வியாளர்கள் பல பரீக்ஷைகள் செய்துதான், ஒருவனுடைய திறமையை அறிகின்றார்கள்.

ஒருவனுடன் பலகாலம் பழகிய பிறகும், அவனுடைய மனதில் என்ன இருக்கின்றது என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை.

அப்படியிருக்க இதையெல்லாம் தாண்டி இருக்கும் ஒருவரின் ஆன்ம அனுபவத்தை எப்படி புரிந்து கொள்வது!!!

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

குறைந்தது 100அன்பர்கள் ஒவ்வொரு முறையும் வந்ததும் குறிப்பிடத்தக்கது. அனைத்து சத்சங்கங்களிலும் அனைவரும் மஹாமந்திரகீர்த்தனம் செய்தனர்.

**மே 19 - சென்னை பாலவாக்கத்தில்,** எஸ்.கே.கார்டன் உரிமையாளர் ஸ்ரீஅருணாசலம் அவர்கள் இல்லத்தில் நடந்த சத்சங்கத்தில் ஸ்ரீஸ்வாமிஜி சனாதனதர்மத்தை பற்றி அருளுரை வழங்கினார்கள். இதில் திரளாக கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருக்கரங்களாலே பிரசாதம் வழங்கப்பட்டது.

**மே 20 - கல்பாக்கம்** ஸ்ரீமதி சுபத்ரா சுந்தரராஜன் அவர்கள் இல்லத்தில் நடந்த சத்சங்கத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அருளுரை வழங்கினார்கள்.

pranams to the lotus feet of his holiness
sri sri muralidhara swamiji

rb **rajmani builders**

launches its new project

**"rajmani's mathura"**

at kolapakkam (near Porur)

56 well designed and ventilated
2/3 bhk apartments

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com

http://rajmanibuilders.websitesforever.com

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- *ஜனனி*

## தன்வந்தீ பாயி - 3

குருதேவர் கூறியது போல், தன்வந்தீ பாயியின் உடல்நிலை தேறியது. இப்பொழுது அவள் மனம் பிருந்தாவனம் செல்ல துடித்தது. அப்பொழுது அவள் வீட்டு வழியாக, தர்ம விரோதமாக நடந்து கொண்டதற்காக, காவலர்கள் ஒரு இளம்பெண்ணையும் ஒரு வாலிபனையும் பிடித்து இழுத்து செல்வதை பார்த்தாள். நடுவழியில், மக்கள் அவர்களை பிரித்து வாழவைத்து விட்டு, மன்னிக்கவும் வேண்டினர்.

ஆனால் அந்த இளம்பெண் "காவலர்கள் எங்களை விடுவித்தாலும் சரி. சிறையில் அடைத்து சித்ரவதை செய்தாலும் சரி. மரணதண்டனையே விதித்தாலும் சரி. நாங்கள் ஒருவரையொருவர் பிரிய மாட்டோம். நாங்கள் ஒருவரை ஒருவர் காதலிக்கின்றோம். விளையாடவில்லை" என்றாள். அவளது வார்த்தையிலிருந்து தன்வந்தீக்கு ஒரு தெளிவு பிறந்தது. "ஒரு சாதாரண மனிதனை காதலித்ததற்காக ஒரு பெண் தன் உயிரையும் கொடுப்பாளேயானால், அதற்காக அரசாங்கத்திற்கே சவால் விட்டு தன் சொந்த பந்தங்களையே துறப்பாளேயானால், நான் மட்டும் ஏன் என் பிரபுவிற்காக இவ்வாறு செய்யக்கூடாது?" என்று அவள் யோசித்தாள். மனதால் எல்லோரையும் துறந்து விட்டு, ப்ருந்தாவனம் செல்வதற்கு தீர்மானம் செய்து விட்டாள்.

ஒருமுறை ப்ருந்தாவனத்தை தரிசனம் செய்யும் சாக்கில் ப்ருந்தாவனம் சென்று, அங்கேயே தங்கி விட்டாள் தன்வந்தீ பாயி. ஜுகல் காட்டில் முகுட்வாலாவின் கட்டிடத்திலிருந்து பஜனை செய்து வந்தாள். ஸ்ரீரூபமாதுரிஜி முன்பே ப்ருந்தாவனம் வந்து அங்கு ஸந்யாஸம் பெற்று ஜுகல் காட்டில் வஸித்து வந்தார். சில காலம் சென்ற பின் இவரிடமிருந்தே சன்யாஸம் பெற்றாள் தன்வந்தீ. இப்பொழுது அவள் பெயர் ப்ரேம மாதுரீ பாய்.

ப்ருந்தாவனத்தில் நிரந்தரமாக வஸிப்பதற்கு எவ்வித

ஏற்பாடுமேயில்லாமல்தான் ப்ரேமமாதுரீ பாய் அங்கு வந்தாள். தன்னுடன் அவள் ஒன்றுமே எடுத்து வரவில்லை. அவளது நாத்தனார் அவளுக்கு தங்க வளையல்கள் அணிவித்திருந்தாள். ஸந்யாஸம் பெற்ற பின் அதையும் வைஷ்ணவ ஸேவையிலேயே செலவிட நினைத்த ப்ரேம மாதுரீ பாயி, அதை விற்று, அப்பணத்தால் தோஸாயத் தெருவில் ஒரு நிலத்தை வாங்கினாள். பல அன்பர்கள் அதில் பல அறைகளை நிர்மாணித்தார்கள். "சுகபவனம்" என்று இன்றும் பிரஸித்தியான இவ்விடம் ப்ருந்தாவனத்தில் சுக ஸம்பிரதாயத்திற்கு முக்கியமான இடமாக உள்ளது. அந்த அறைகளுள் ஒன்றிலேயே, ப்ரேம மாதுரீ பாயும் வஸிக்கலானாள்.

இருக்க இடம் கிடைத்து விட்டது. அவளது ஜீவனத்திற்கும் அவள் உறவினர்கள் உதவ முன்வந்தார்கள். ஆனால் அவள் அதை ஏற்கவில்லை. "நான் யாரை நம்பி இங்கு வந்தேனோ அவனே என்னை காப்ப்பாற்றுவான்" என்று கூறி விட்டாள். அதேபோல் ஒருநாள் கூட அவள் உணவு கிடைக்காமல் திண்டாடவே இல்லை. மேலும் முக்கியமான நாட்களன்று வைஷ்ணவ ஸேவா கூட அவள் செய்து வந்தாள். எதற்குமே பற்றாக்குறையே இல்லாமல்தான் இருந்தாள்.

ப்ரேமமாதுரீ பாய் நித்யம் யமுனையில் ஸ்நானம் செய்வார். தனது கைகளாலேயே மாவு பிசைந்து மிகவும் சுசி-ருசியுடன் டாகுருக்கு நிவேதனம் தயாரிப்பாள். அவரது குருபாயி (அதே குருவின் சீடர்) மாஸ்டர் மூல்சந்த்ஜீ அவர்களும் ப்ருந்தாவனத்தில் இருந்து கொண்டு பஜனை செய்து வந்தார். அவர் ப்ரேமமாதுரீபாய் அவர்களால் மிகவும் ஈர்க்கப்பட்டார். அவர் பாயிஜீயிடமிருந்து ஸந்யாஸம் பெற விரும்பினார். ஆனால் பணிவே உருவான பாயிஜீ, யாருக்கும் தீக்ஷை அளிக்க தனக்கு தகுதி இல்லை என்று எண்ணி மறுத்து விட்டார். ஆனால் கனவில் ஸ்ரீஸரஸமாதுரீஜி பாயிஜீக்கு ஆக்ஞையிட்டதின் பேரில், அவர் மூல்சந்த்ஜீக்கு ஸந்யாஸம் அளித்தார். அவர் ஸ்ரீமத்சரண்ஜீ என்ற தீக்ஷா நாமம் பெற்றார்.

(தொடரும்)

## *மாலே மணிவண்ணா – 96*

–மகாவித்துவான் மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

சுவை, ஒலி, ஒளி, நாற்றம், பரிசம்(ஊறு) என்ற தன்மாத்திரைகள் ஐந்தும். அந்தவிடயங்களைக் கொள்ளும் அறிகருவியாகிய வாய், செவி, கண், மூக்கு, மெய் என்ற ஞானேந்திரியங்களும் நீயே என்று எம்பெருமானைத் தத்துவ வடிவினனாகக் காண்கிறார் நல்லெழுநியார்.

ஞானேந்திரியங்களாகிய அறிகருவிகளைக் கூறவே, தொழிற் கருவிகளாகிய கன்மேந்திரியங்கள் வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்னும் ஐந்தும் கூறப்பட்டதாக ஆயிற்று என்பதைக் குறிப்பால் உணரலாம்.

*முந்து யாம் கூறிய ஐந்த னுள்ளும்*
*ஒன்றனில் போற்றிய விசும்பும் நீயே*
*இரண்டின் உணரும் ஒளியும் நீயே*
*மூன்றின் உணரும் தீயும் நீயே*
*நான்கின் உணரும் நீரும் நீயே*
*ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே*

முன்னர்க் கூறிய தன்மாத்திரை எனப்படும் புலன்கள் ஐந்தில் ஓசை (சப்தம்) என்ற குணத்தால் பாதுகாத்து அறியப் படுவதாகிய ஆகாயம் என்கிற பூதமும் நீயே ஆவாய். ஆகாயத்திற்கு சப்தம் குணமாகும். ஓசையில் தோற்றிய ஆகாயம் என்று கொள்ளினும் தவறில்லை. முன்னர் ஓங்காரமாகிய ப்ரணவ ஒலியே எல்லாவற்றுக்கும் மூலம் என விளக்கப் பெற்றது கொண்டு அறிக.

ஒலியிலிருந்து ஆகாயம் உண்டாகி, பின்னர் ஒவ்வொன்றாக ஏனைய பூதங்கள் ஒன்றிலிருந்து ஒன்றாக தோன்றின என்னும் படைப்பு கோட்பாடு கூறப்படுகிறது.

ஓசை, பரிசம் இரண்டினால் உணரப்படும் காற்றும் நீயே. ஓசை, ஊறு, ஒளி என்ற மூன்றால் உணரப்படும் தீயும் நீயே. ஓசை, ஊறு, ஒளி, சுவை என்ற நான்கால் உணரப்படும் நீரும் நீயே. ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற ஐந்தால் உணரப்படும் நிலனும் நீயே.

ஆக, ஐம்பூதங்களும் நீயே ஆக இருக்கின்றாய் என்றார். தன்மாத்திரைகளாய புலன்களில் இருந்து பூதங்கள் தோன்றுகின்றன. பின்னர்த் தோன்றிய பூதங்களில் அவற்றின் முன் தோன்றிய குணங்கள் அமைந்திருத்தலின், ஒன்று முதல் ஐந்து வரை புலன்கள் பூதங்களில் கூடியுள்ளன.

இக்கருத்தை திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தத்தில் முதற்பாடலில்,

*பூநிலாய ஐந்துமாய் புனற்கண் நின்ற நான்குமாய்*
*தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்த கால் இரண்டுமாய்*
*மீநிலாய ஒன்றுமாகி வேறு வேறு தன்மையாய்*
*நீநிலாய வண்ணம் நின்னை யார் நினைக்க வல்லரே*

என்று நிலம் முதலாக ஆகாயம் வரை ஒடுக்க கூறியுள்ளமை அறியலாம்.

இக்கருத்தையே மாணிக்க வாசகப் பெருமான், திருவாசகம், போற்றித் திருவகவலில்,

*பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி*
*நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி*
*தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி*
*வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி*
*வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி*

என பார் முதல் வெளிவரை தன்மாத்திரையாகிய புலன்களுக்கும் பூதங்களுக்கும் உள்ள தொடர்பினை விளக்கிக் கூறியிருப்பதை இங்கு ஒப்பு நோக்குதல் மகிழ்ச்சி தரும்.

தன்மாத்திரை, அறிகருவிகள், அவற்றால் குறிப்பின் உணரும் தொழிற்கருவிகள், தன்மாத்திரை வழித் தோன்றும் பருப்பொருளாகிய பூதங்கள் என்ற நான்கு ஐந்து 20 தத்துவங்களை விளக்கிய பரிபாடல் மேல் உள்ள தத்துவங்களைக் கூறுகிறது.

(தொடரும்)

# அப்பாலுக்கு அப்பால்

## அல்லமபிரபு -3



அல்லமர் மாயையை பிரிந்தபின் தனிமையில் தவம் செய்து வந்தார். அவர் தவம் செய்து வந்த இடத்தில் ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. அதை தட்டி பார்க்கையில் ஒரு கோயிலின் கும்பகலசம் தென்பட்டது. அதனடியில் ஏதோ ஒரு விசேஷம் இருக்க வேண்டும் என அவர் பெரிதும் நம்பினார். அவர் மஹிமையை புரிந்து கொண்டிருந்த மன்னனிடம் சொல்லி அவ்விடத்தை தோண்ட செய்தார். உள்ளே ஒரு பாழடைந்த கோயில் இருப்பது உறுதி செய்யப்பட்டது. அந்த கோயில் தாளிடப்பட்டிருந்தது. ஏதோ ஒரு அச்சம் காரணமாக, ஒருவருக்கும் அந்த கோவிலினுள் பிரவேசிக்க இஷ்டமில்லை. பெரிய உந்துதலினால் அல்லமர் மட்டும் தனியே கோவிலுக்குள்ளே சென்றார்.

உள்ளே அவர் கண்ட காட்சி மிகவும் ஆச்சரியமாக இருந்தது. கோயிலினுள்ளே மிகப்பெரிய பிராகாசமாக இருந்தது. அந்த வெளிச்சம் எங்கிருந்து வருகிறது என்று தெரியவில்லை. ஆனால், உள்ளே எந்த ஒரு தீபமோ அல்லது ஒளி தரக்கூடிய மாணிக்கம் போன்ற கற்களோ காணப்படவில்லை. உள்ளே ஒரு யோகீஸ்வரர் அந்த ஒளியில் மூழ்கியவராக காணப்பட்டார். அல்லமரும் அந்த ஒளியில் தாமும் மூழ்கி இருப்பதை உணர்ந்தார். அந்த யோகீஸ்வரரின் கைகளில் ஒரு சிவலிங்கம் தென்பட்டது. அந்த யோகி சிவலிங்க தியானத்தில் அமர்ந்திருந்தார். அதில் வைத்த பார்வையை விலக்காதவராக காணப்பட்டார் அவர். அல்லமர் அவரை நெருங்கினார். யோகி சிறிதும் அசையவில்லை. அவர் பார்வையும் மாறவில்லை. அவர் கண்கள் விழித்துத்தான் இருந்தன. அதனால் அவருக்கு அனிமிச யோகி என்று பெயர் . அனிமிச என்றால் கண்களை மூடாதவர் என்று அர்த்தம். கண்கள் திறந்திருந்தாலும் அவர் சமாதியில் ஆழ்ந்திருந்தார் என்பது அல்லமருக்கு புரிந்தது. அதுவும் அவர் தன் கையில் உள்ள சிவலிங்கத்தை ப்ரேமையுடன் பார்த்து, அந்த தியானத்தினாலேயே சமாதி நிலையை எட்டி இருக்கிறார் என்றும் அல்லமருக்கு புரிந்தது.

அல்லமருக்கு இதுகாறும் குரு என்றொருவர் இல்லை. ஆனால் இப்பொழுது அவர் மனம், முன்னால் யோகத்தில் ஆழ்ந்திருப்பவரே தனக்கு குரு என கூறியது. அவர் மனம் தன் குருவிடத்தில் இனம் புரியாததாக பிரியமுடன் ஈடுபட்டது. அதனால் மேலும் அந்த யோகியின் அருகில் சென்றார். அந்த சமயத்தில் பல்வேறு விதமான சிந்தனைகளில் அல்லமர் மூழ்கி இருந்தார். அவர் ஒரு அவதாரமே ஆயினும், உலக வழக்கிற்கு உட்பட்டு, எப்படி மாபெரும் ஞானிகளும் குருவை அண்டி உபதேசிக்கப்பெறுகிறார்களோ, அப்படியே அல்லமரும் அந்த யோகீஸ்வரரிடம் உபதேசம் பெற ஆசைப்பட்டார்.

ஒரு கண நேர சந்திப்புதான் எனினும், தன் குருவிடம் அபார பிரியம் வைத்திருந்தார் அல்லமர். அதை அவரது வசனங்களில் தெளிவாக பார்க்க முடிகிறது. அவர் குருவின் மேல் பாடிய சில வசனங்கள் அருமையிலும் அருமை. (குஹேஸ்வரா எனும் பதம் அவரது அனைத்து வசனங்களிலும் வரும். குகை போன்ற கோவிலில் தன் குருவை அவர் பார்த்ததால் இப்படி பாடியிருக்கலாம்.) அவற்றில் ஒன்று குருவின் அருளின்றி பரப்ரும்மத்தை ஒருவன் பிடிக்க முயல்வது முட்டாள்தனம் என்று கூறுகிறது.

*பார்க்க முடியாததை தொட முடியாது*

*அப்படி பார்க்க முடியாததை பிடிக்க பார்த்து அயர்கிறாய்!*

*பார்த்தவனை பார்த்தால், அந்த ஆசிரியனின் திருவடியை இறுக பிடித்தால்!*

*குஹேஸ்வரா! பார்க்க முடியாதது தெரியலாகுமே!*

குரு கிடைத்ததால் ஆனந்தத்தில் மூழ்கினார் அல்லமர். கூடவே ஒரு சந்தேகமும் அவருக்கு தோன்றியது. ஏனெனில் அவர் குரு பேசவே இல்லை. மேலும் அல்லமருக்கு ஆச்சரியம் அங்கு காத்திருந்தது.

(தொடரும்)

**GOD is Great; To accept HIM is Greater; FAITH on HIM is Greatest.**

**-Maharanyam Sri Muralidhara Swamiji**

ஒரு வீரன் தன் கத்தியை தீட்டி, எதிரியை வீழ்த்த வேண்டும். அதே கத்தியால், தன்னைத்தானே குத்திக்கொள்பவன், வீரனும் அல்ல; புத்திசாலியும் அல்ல. அதுபோல், தன் அறிவை, சாஸ்திர ஞானத்தால் கூர்மையாக்கி கொள்வது தன்னுடைய அக்ஞானத்தை வெட்டுவதற்காக. அதை விட்டுவிட்டு, தன்னுடைய கூர்மையான அறிவால் பிறரை வாதத்தில் வெல்வதால், ஒரு பிரயஜோனமும் இல்லை.

–மஹாரண்யம் ஸ்ரீமுரளீதர ஸ்வாமிஜி

<u>சனாதனப் புதிர் - பகுதி - 28</u> ( விடைகள் அடுத்த இதழில்)
–ஆத்ரேயன்

1. இந்த தேவியை உபாஸித்தால் சரஸ்வதி கடாக்ஷம் பரிபூரணமாக சித்திக்கும் தேவியின் பெயர் என்ன? ஆதாரங்கள் என்ன?
2. நக்கீரர் மறுபிறவி எடுத்தார். மறுபிறவியில் அவர் பெயர் என்ன? இந்த குறிப்புகள் எந்த மாஹாத்மியத்தில் காணப்படுகிறது?
3. வைஷ்ணவ க்ரந்தமான பாகவதத்தில், "சிவ" என்ற அக்ஷரங்களின் பெருமை எங்கே காணப்படுகிறது?
4. மதுரையின் மற்ற பெயர்கள் என்ன?

சனாதனப் புதிர் : பகுதி – 27 விடைகள் –ஆத்ரேயன்

1.தேவி பாகவதம் 12 ஸ்கந்தம் அத்தியாயம் 6 ; ஸ்ரீ நாராயணம் நாரதருக்கு உபதேசிப்பதாக அமைந்துள்ளது.
2. ராதையின் பிரபாவங்கள் தேவி பாகவதத்தில் காணப்படுகின்றன. ஒன்பதாவது ஸ்கந்தம் முதல் அத்தியாயம், மேலும் 50வது அத்தியாயம்.
3. தேவி பாகவதம் - ஸ்கந்தம் எட்டு - அத்தியாயம் 24;
4. 12 ஸ்கந்தங்கள் ; 318 அத்தியாயங்கள் ; 18000 ஸ்லோகங்கள்.
5. தேவி பாகவதம்.

## சைதன்ய மஹாப்ரபு நாம பிக்ஷா கேந்திராவின் புதிய வெளியீடு "ஸ்ரீமத் பாகவதம்" இரண்டாவது ஸ்கந்தம் தமிழில் உரை - மஹாரண்யம் ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள்

மதுரமுரளி சந்தாதாரர் ஆக விரும்புகிறவர்கள் Guruji Sri Muralidhara Swamigal Mission என்ற பெயருக்கு 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 என்ற முகவரிக்கு ரூ120/-ஐ (ஒரு வருட சந்தா) உள்ளூர் காசோலை / டி.டி. / மணியார்டர் அனுப்பவும். நேரில் ரொக்கம் கொடுத்தும் சந்தாதாரர் ஆகலாம். தங்களது முகவரியை மிகவும் தெளிவாக குறிப்பிடுமாறு கேட்டு கொள்கிறோம். ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் விவரங்களுக்கு அணுகவும்: PH: +91-44-24895875

Madhuramurali

- Published by V.Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83.
- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this Magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the Publisher of Madhuramurali.
- Views expressed in Articles are those of the respective authors and do not reflect the views of the magazine.
- Advertisements in Madhuramurali are invited.

## ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| மே 29,30,31 | ஹைதராபாத் - வேத ஸாஸ்த்ர வித்வத் பரீக்ஷகா |
| ஜூன் 11 | கூடுவாஞ்சேரி சத்சங்கம் |
| ஜூன் 26 | குரோம்பேட்டை விபூதி பாபா கோவிலில் சத்சங்கம் |
| | ஏகாதசி - ஜூன் 12, 27 , ஜூலை 11, 26 |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary
to **HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.